அவர்கள் அங்கே அந்த தற்காலிக கொட்டகைகளையாவது உடனடியாக கட்டித்தரும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றி அரசு உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைபடுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : இச்சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) நிதி ஒதுக்க (எண்-2) சட்டமுன்வடிவு, 1980.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்-2) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/80 ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் ''

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1980–81 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது சொல்கிற போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், '' இங்கே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். விவசாயிகளுடைய பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். நீங்கள் பட்ஜெட்டிலே அதற்கான விளக்கத்தைப் பாருங்கள் '' என்று சொன்னார்கள். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மிக மகிழ்ச்சியோடு பட்ஜெட் தாக்கல் செய்கிறபோது விவசாயிகளுடைய பிரச்னைகள் தீர்த்து வைக்கப்பெறும் என்று நம்பிக் கொண்டிருந்தோம்.

[முற்பகல் 10-20]

ஆனால் இன்றைய தினம் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; இலட்சக்கணக்கான தமிழ்நாடு விவசாயப் பெருங்குடி மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் நம் முதல் அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் டெல்லி சென்று விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன்.

---

* 1980, ஜூலை 29 ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.